AHMADI TAMIL CHURCH
ST.PAUL'S CHURCH KUWAIT
அஹமதி தமிழ் திருச்சபை
PREPARE TO MEET GOD

# பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

# "கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்"..

யாத் 14:14

# HAPPY NEW YEAR

# 2023

செய்தி மலர்
2023
ஜனவரி

இதழ் : 08
மலர் : 19



# சபை ஊழியரின் அன்பு மடல்



இறை மகனாம், இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் சபையார் யாவருக்கும் "இனிய புத்தாண்டு நல் வாழ்த்துகளை கூறிக்கொள்வதில் செயற்குழுவின் சார்பில் மிகவும் களிகூறுகின்றேன்.

கடந்த 2022 ஆண்டு முழுவதும் கர்த்தர் தாமே நம் ஒவ்வொருவரையும் சுகத்தோடும், பெலத்தோடும், முழு ஜீவனோடும் காத்தார். நல்ல ஆராதனை நேரங்கள், சபைகூடுதல், ஜெபநேரங்களை கொடுத்தார். மேலும் ஆவிக்குரிய மன்னாவினாலும் போஷித்து நம் ஆத்துமாவை திருப்தியாய் நடத்தினார்.

நம் அநேகருடைய ஜெபத்திற்கு அவர் கண்கள் காண்கிறவைகளாகவும், செவிகள் திறந்தவைகளுமாக இருந்து நம்மை அநேக விதங்களில் ஆச்சரியப்படும்படியாய் ஆசீர்வதித்து நடத்தி வந்த தேவாதி தேவனுக்கு நாம் ஒவ்வொருவரும் உள்ளத்தில் ஆழத்திலிருந்து நன்றி சொல்லி துதிப்போம்.

வாக்குரைத்தவர் வாக்கு மாறாதவர் கடந்த ஆண்டு "துஷ்டன் இனி உன் வழியாய் கடந்து வருவதில்லை" என்றவர் எல்லாவித துஷ்டதனத்திற்கும் நம் ஒவ்வொருவரையும் பாதுகாத்து தம்மை நம்புகிறவர்களை அறிந்து இக்கட்டு காலத்திலே அரணான கோட்டையாக இருந்து அவர் நல்லவர் என்பதை ருசிக்க செய்தார்.

கடந்த 2022 ஆம் ஆண்டு சில சில பேரிடர்கள் வந்த போதும் சூழ்நிலைகள் நமக்கு சாதகமாக இல்லாத போதும், "நீங்கள் என் கையில் இருக்கிறீர்கள்" என்று சொன்ன தேவாதி தேவன் தாமே நம் ஒவ்வொருவரையும் அவர் உள்ளங்கையில் ஏந்தி, தாங்கி, தப்புவித்து, சகல ஆசீர்வாதங்களோடு நடத்தி வந்து, இந்த புதிய ஆண்டுக்குள் பிரவேசிக்க செய்திருக்கிறார்.

கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து அவரை தன் நம்பிக்கையாய் கொண்டிருந்து நாம் ஒவ்வொருவரும் பாக்கியவான்களாக பாக்கியவதிகளாக சாட்சியுள்ள ஜீவியம் வாழ கர்த்தர் கிருபை செய்வாராக.

நம்முடைய பிள்ளைகள் படிப்பிலோ, விளையாட்டிலோ, வேத ஞானத்திலோ ஏதாவது ஒரு வெற்றியை கண்டுவிட்டால் அல்லது அதிலே உறுதியாய் இருந்து முன்னேறி செல்கின்ற போது பெற்றோர்களாகிய நாம் இணைந்தோ அல்லது தனித்தோ அவர்களை உற்சாகப்படுத்தியும் தேவைகளை சந்தித்தும் அவர்களை அதிலே உறுதியாய் நிற்க செய்கிறோம். பாதுகாக்கிறோம், முன்னேற செய்கிறோம்.

நாமும் கூட நம்முடைய வேலை ஸ்தலத்திலே நம்முடைய வேலைகளை திருப்தியாய் செய்து முடிக்கும் போதும் அதிக நன்மைகளை நிறுவனத்திற்கு கொண்டு வரும்போதும் நம்முடைய அதிகாரிகள் நமக்காக நம்முடைய ஈடுபாட்டை அறிந்து நம்மை உயர்த்தவும், உற்சாகப்படுத்தவும் அவர்கள் நிறுவனத்திடமோ, மேலதிகாரிகளிடமோ சென்று தமக்காக பரிந்து பேசுவார்கள்.

சில சமயங்களில் நமக்காக போராடியும் நமக்கு நன்மையானதை பெற்று தருவார்கள். காரணம் நாம் நம் நிறுவனத்தின் மேலும் நம் மேலதிகாரிகள் மேலும் நாம் வைத்திருக்கும் நம்பிக்கை, ஈடுபாடு, விசுவாசம் அவைகளை பெற்று தரும். உலகப்பிரகாரமான சில காரியங்களிலேயே இப்படியான ஆசீர்வாதங்களை காண்கிற நாம் ஆலயத்திலும் கர்த்தருக்கு அடுத்த காரியங்களிலும், ஊழயங்களிலும், ஊழிய ஸ்தலங்களிலும் நாம் நம்முடைய விசுவாசத்திலே உறுதியாய் உண்மையாய் உற்சாகமாய் இருக்கின்றபோதும், அவரின் நாமத்துக்கு சாட்சியாய் வாழ்கின்றபோதும் அநேகருக்கு அவரை வழி காட்டுகிறவராக.

நாம் காண்பிக்கும் போதும், ஊழியப்பாதையில் சோதனைகளை ஜெயித்து சோர்ந்து போகாமல் கர்த்தரின் பணியை செய்யவும் நமக்கு துணையாய் அரணாய் கோட்டையாய் இருப்பார். "யுத்தம் கர்த்தருடையது"
"கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார், நீங்கள் சும்மாயிருப்பீர்கள்" (யாத்-14:14)

கிறிஸ்துவுக்குள் பிரியமான சபையோரே என் தேவ ஜனமே, கர்த்தர் தாமே நமக்கு இந்த அதிசயதக்க வாக்குதத்தத்தை இந்த 2023 ஆண்டிலே கொடுத்து நம்மை வழி நடத்த வல்லவராயிருக்கிறார்.

ஆம் நாம் செய்ய வேண்டியதெல்லாம் கர்த்தர் மேல் கொண்ட விசுவாசத்திலும், அவருக்காக செய்த பொருத்தனைகளிலும், அர்ப்பணித்திருக்கின்ற ஊழியத்திலும் மற்றவர்களை அவரிடம் வழி நடத்துவதிலும், சபையின் காரியங்களிலும், ஒரு நாளும் குறைவு படாதவர்களாய் அவரை மகிமைப்படுத்துகிறவர்களாகவும் அவரை மட்டுமே உயர்த்துகிறவர்களாய் அவரிடத்தில் இன்னும் கிட்டி சேருவோமா? கரங்களை நீட்டி அழைக்கின்ற கர்த்தரை நோக்கி பார்ப்போம்.

உலக கவலைகள், இன்பங்கள், இச்சைகள், ஆசைகள், அவிசுவாசம் நம்மை தடை செய்ய வரலாம். அவைகள் நம்மை மேற்கொள்ள ஆண்டவர் நம்மை ஒரு நாளும் விடமாட்டார். நமக்காய் யுத்தம் செய்வார். சாத்தானை அவரின் காலடியில் மிதித்து நம்மை ஜெயம்கொள்ள செய்வார். நாம் கர்த்தரையே நம்பி துதித்துக்கொண்டிருந்தால் போதும் பார்வோனின் படைகளும், எகிப்தியரும் இஸ்ரவேல் ஜனங்களை சமீபித்து வருகிறதை கண்டவர்கள் பயந்தாலும் வனாந்திரத்தில் மடிந்துவிடுவோம் என நினைத்தாலும் அவர்கள் செய்த ஒரு மாபெரும் காரியம் கர்த்தரை நோக்கி கூப்பிட்டார்கள்.

ஆம், பிரியமானவர்களே, அந்த இக்கட்டான சூழலிலும் தேவ மனிதன் மோசே அவர்களைப் பார்த்து "**பயப்படாதிருங்கள், நீங்கள் நின்றுகொண்டு இன்றைக்கு கர்த்தர் உங்களுக்கு செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள், இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள்**" என்றார். (யாத்-14:13)

நாமும் நம்மை சுற்றியிருக்கும் எதிர்கொண்டு வரும் சத்துருக்களை ஜெயிக்க பட்டயத்தையோ சுய பெலத்தையோ சார்ந்து செல்லாமல் இஸ்ரவேல் ஜனங்களைப் போல தேவனோடே கூடப்போவோம் (உபா.20:34)அப்பொழுது நம் இருதயம் துவளாமலும், பயப்படாமலும், கலங்காமலும் இருந்து ஒரு வெற்றியுள்ள வாழ்வு வாழ கர்த்தர் கிருபை செய்வார்.

ஆசா கேட்டுக்கொண்டது போல "**கர்த்தாவே நீர் எங்கள் தேவன், மனுஷனை உம்மை மேற்கொள்ளவிடாதேயும்**"என்றான்.(2-நாளா-1:11) ஆம் பிரியமானவர்களே, பலமுள்ளவர்களுக்காகிலும், பலனற்றவர்களுக்காகிலும் உதவி செய்கிறது ஆண்டவருக்கு லேசான காரியம். எந்நாளும் தம் புய பெலத்தை, ஞானத்தை, அதிகாரத்தை, ஆஸ்தியை முன் வைக்காமல் அவரையே முன் வைப்போம். அவர் நமக்கு ஜெயம் கொடுப்பார்.

சங்-27:34-ல் தாவீது வெளிப்படுத்துவது போல நமக்கு விரோதமாக ஒரு பாளயமிறங்கினாலும், யுத்தம் எழும்பினாலும் நம் இருதயம் பயப்படாமல்

தன் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய சமூகத்திலும், ஆலயத்திலும் தங்கியிருந்து வாழும்போது அவர் நம்மை கன்மலையின் மேல் உயர்த்துவார். சங்-35:1-4 வாசிக்கிறபடி கர்த்தர் நம்முடைய வழக்காளிகளோடே வழக்காடி கேடகத்தையும், பரிசையும், பிடித்தும் நம்மை துன்புறுத்துகிறவர்களோடே யுத்தம் செய்து அவர் நமது இரட்சிப்பின் தேவனென்று வெளிப்படுத்துவார்.

இம்மாதம் நடைபெறவிருக்கும் எல்லா ஆராதனைகள் ஜெபகூடுகைகள் அனைத்திலும் ஜெபத்தோடு கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தைப் பெறுவோம்.

மீண்டும் ஒருவிசை "புத்தாண்டு வாழ்த்துக்கள்" வருகின்ற புதிய வருஷம் ஆசீர்வாதமான ஆண்டாக அமைய ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துதானே நம் அனைவரோடுங்கூட இருந்து காப்பாராக. ஆமென்.

கர்த்தரின் பணியில்,
**சகோ. ஜெயசேகர்**

## வெள்ளி நிலா

கள்ளமில்லா ஒரு வெள்ளி நிலா
என் இருளை ஒளியாக்க வந்த நிலா
வறுமை நிறைந்த வாழ்க்கையிலே
வசந்தம் அள்ளி தந்த நிலா
சிங்கக்கெபியின் நடுவினிலே
சிக்கி விடாமல் காத்த நிலா
உலகத்தின் இன்பத்தை தேடுகையில்
உன் பாதமே பேரின்பம் என்ற நிலா
கன்மலை மேலே உயர்த்தி விட
கண்ணின் மணியாய் காத்த நிலா
பன்னிரெண்டு மாதம் பாதுகாத்து
புதிய வருடத்தை கொடுத்த நிலா
பாரினில் உந்தன் புகழ் போற்ற
பாவியாம் என்னை அழைத்த நிலா
என் நிழலாய் நீர் இருப்பதனால்
என்றும் நீரே எந்தன் சொந்த நிலா .

**சகோதரி.வனிதா காளிமுத்து**

சங்கீ–121:1 எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன்.

சமீபத்தில் தின தியானப்பகுதியில் சொல்லப்பட்ட ஒரு வாசகம் என்னைக் கவர்ந்தது.

"If you are worrying, that means you are meditating on your problems. change that meditation on the problem to meditation on the promises and goodness of God, than your worry will turn to victory; you will become a victor instead of a victim"

உங்களுக்கு கவலை இருக்குமென்றால் அதற்குக் காரணம் நீங்கள் உங்கள் பிரச்சனையையே தியானித்துக் கொண்டிருக்கிறீகள். உங்களுடைய தியானத்தை, சிந்தனைகளை பிரச்சினையிலிருந்து, பிரச்சினைகளை சிந்திப்பதை, தியானிப்பதை விட்டுவிடுங்கள். அதற்குப் பதிலாக, தேவனுடைய வாக்குத்தத்தங்களையும், தேவ மகிமையையும் தியானிக்க தொடங்குங்கள். உங்களுடைய கவலை வெற்றியாய் மாறும்.

"உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்" (யோவா–16:20)அப்பொழுது நீங்கள் பாதிப்புக்குள்ளாக மாட்டீர்கள் வெற்றி உங்களை நாடி, ஓடி வரும். படிப்பிலே மிகவும் சிறந்து விளங்கிய ஒரு வாலிபனிடம் கேட்டார்களாம். "உங்களது வெற்றியின் இரகசியம் என்ன? அவன் சொன்ன பதில் " I gave God first place in my life; He gave me first place (rank) in my studies.

நான் ஆண்டவருக்கு முதல் இடத்தை என்னுடைய வாழ்க்கையில் கொடுத்தேன். அவர் எனக்கு படிப்பிலே முதலாவதாக வர உதவி செய்தார். மத்–6:33 "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்,

அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக்கொடுக்கப்படும்" எனவேதான் சங்கீதக்காரன் சொல்கிறான். எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன். (சங்கீ–121:1)

1. <u>பயத்திலும் தேவ பெலத்தை நினைத்த தாவீது.</u>

கோலியாத்தைக் கண்டு இஸ்ரவேலர் மிகவும் பயப்பட்டு, ஓடிப்போனார்கள், கலங்கி நின்றார்கள். கலக்கம், திகில் அவர்களை ஆட்கொண்டது. காரணம் அவர்கள் கோலியாத்தின் உருவத்தை, ஆயுதங்களைப் பார்த்து பயந்தார்கள். அதைக்குறித்து பேசினார்கள். செங்கடலை இரண்டாய்ப் பிரித்து வழி நடத்தின தேவ வல்லமையை மறந்து போனார்கள். பத்து வாதைகளின் மூலமாக, எகிப்தியிலிருந்து வழி நடத்தி வந்த தேவனுடைய கிரியைகளை நினைக்கவில்லை. தேவனுடைய வாக்குத்தத்தங்களை மறந்தார்கள். கோலியாத்தைக் கண்டு பயந்தார்கள்.

ஆனால் தாவீது, பயத்தை தேவ பெலத்தால் விரட்டியடித்தான். தேவன் முன்பு தனக்கு செய்த நன்மைகளை தியானிக்க ஆரம்பித்தான். சிங்கத்திடமிருந்தும், கரடியிடமிருந்தும், தேவன் எப்படிக் காப்பாற்றினார் என்று தியானிக்க ஆரம்பித்தான் (1சாமு-17:37) தோல்வியை அல்ல: தாவீது கோலியாத்தை வீழ்த்தி வெற்றி பெற்றான். காரணம் அவன் தேவனுடைய கிரியைகளையே தியானித்துக்கொண்டிருந்தான்.

## 2. <u>பாடுகளிலும், பாடல்கள் பாடின பவுல் .</u>

தேவ ஊழியத்தை செய்த பவுலும், சீலாவும் அடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள். தேவ தரிசனத்துக்கு கீழ்படிந்து மக்கதொனியாவுக்கு வந்தமோ ஏன் இந்த பாடுகள் என அவர்கள் கேள்வி கேட்க வில்லை. பாடுகள் அவர்களுக்கு வருத்தத்தை கொடுக்க வில்லை. தேவ வாக்குத்தத்தத்தை, தேவ தரிசனத்தை, தேவ வல்லமையை தியானிக்க ஆரம்பித்தார்கள்.

அவர்கள் வாயிலிருந்து துதியின் பாடல்கள் வெளிவந்தது. பலருடைய உள்ளங்களை அசைத்தது. சிறைச்சாலையின் அஸ்திபாரங்களையும் அசைத்தது. பாடுகள் வெற்றிப்படிகளாய் மாறின. இந்த உலகப்பாடுகள் தற்காலிகமானது. ஆனால் தேவ வசனமோ? என்றென்றைக்கும் நிலைத்து நிற்கும். (ஏசாயா-40:8) புல் உதிர்ந்து பூ உதிரும். நமது தேவ வசனமோ? என்றென்றைக்கும் நிலைத்து நிற்கும்.

உலோகப் பாத்திரங்களை பழுது பார்க்கும் சாதாரண ஒரு வேளை செய்து வந்த ஜான் பன்யன் இங்கிலாந்து தேசத்தில் எதிர்ப்புகள் மத்தியிலும் தேவ வசனத்துக்கு கீழ்படிந்து, மற்ற நேரங்களில் தைரியமாக சுவிசேஷத்தை பிரசங்கித்தார். 12 வருட சிறை வாச தண்டனை அவருக்குக் கிடைத்தது. சிறைச்சாலை கம்பிகளால், அவருடைய இருதயத்தில் கொழுந்து விட்டு எரியும் சுவிசேஷத் தீயை அணைக்க முடியவில்லை. சறை என்னுடைய வாழ்வில் முடிவல்ல,

அதையும் தாண்டி தேவன் வைத்திருக்கும் நித்திய ராஜ்ஜியத்தை தியானிக்க ஆரம்பித்தார். உலகப் பிரசித்தி பெற்ற மோட்ச பிரயாணம் புத்தகத்தை எழுதி முடித்தார். அல்லேலூயா.

## 3. குறைவிலும் வெகுநேரம் ஜெபித்த அன்னாள்..

அன்னாளுடைய கர்ப்பம் அடைக்கப்பட்டிருந்தது குழந்தை பாக்கியமில்லை. பெனின்னாள் அன்னாளை விசனப்படுத்தினாள். ஆனால், அன்னாளோ? தேவ சமூகத்தை நாடினாள். வெகுநேரம் ஜெபித்தாள். கர்த்தருடைய சந்நிதியில் இருதயத்தை ஊற்றி விட்டாள். மாத்திரமல்ல, தேவ சமூகத்தில் பொருத்தனை பண்ணினாள்.

அன்னாளுடைய ஜெபம் அவளுடைய ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தினது. அப்புறம் அவள் துக்கமுகமாக இருக்கவில்லை. தேவன் அவளுக்க புகழ்பெற்ற தீர்க்கதரிசியாகிய சாமுவேலைக் கொடுத்தார். நினிவே மக்கள் உபவாசித்து ஜெபித்தார்கள். தேவனைத் தேடினார்கள்.

அவர்களுடைய இருதயத்தில் ஒரு பெரிய மாற்றம். பாவத்திலிருந்து மனம் திரும்பினார்கள். பல மாற்றங்களுக்காக, ஜெபிக்கும் நம் இருதயத்தில் தேவன் விரும்பும் மாற்றம் உண்டா? சிந்திப்போம். வேத வாசிப்பு, தியானம், ஜெப வாழ்க்கை வெளிப்பூச்சு அல்ல.

நம் இருதயத்தில் தேவ சித்தம் படி மாற்றம் உருவாக வேண்டும். அப்பொழுது, தேவனுடைய கரம் அசையும். நினிவே மக்களுக்கு இரங்கின தேவன் நமக்கும் இரங்குவார். அல்லேலூயா.

ஏசாயா–43:18–19 முந்தினவைகளை நினைக்கவேண்டாம்: பூர்வமானவைகளைச் சிந்திக்க வேண்டும். இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்: இப்பொழுதே அது தோன்றும்: நீங்கள் அதை அறியீர்களா? நான் வனாந்திரத்திலே வழியையும் அவாந்திர வெளியிலே ஆறுகளையும் உண்டாக்குகிறேன்.

சகோதரனே, சகோதரியே உன் வாழ்க்கையில் தோல்வி மேல் தோல்வியா? அதை நினைக்க வேண்டாம். இது தான் நடக்கம், இதை மாற்ற முடியாது, என பலர் கூறலாம்.

பூர்வமானவைகளை சிந்திக்காதீர்கள். வாக்குத் தத்தங்களையும், அவைகளைத் தந்த தேவனையும் தியானியுங்கள். அவர் உங்களுடைய வாழ்விலே வெற்றியை அறிவார்! அவர் சித்தப்படி வழி நடத்துவார். ஆமென்.
தேவனுக்கே மகிமை உண்டாவதாக,

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரன்,

சகோ. கிருஸ்டோபர் தேவராஜ்

## அலெக்ஸாண்டர் டப்(1806–1878)

இந்தியாவில் உள்ள உயர்ந்த ஜாதி மக்களை சுவிசேஷத்தால் சந்திக்க புதிய தரிசனத்துடன் 1830–ஆண்டு கொல்கத்தாவில் அடி வைத்தவர் அலெக்ஸாண்டர் டப். இவர் இந்தியாவிற்கு வருமுன் செல்வந்தர்கள் உயர்குல மக்கள், சுவிசேஷத்திற்கு செவிசாய்க்க வாய்ப்புகள் குறைவாக இருந்தன. கிராம சூழ்நிலையில் உள்ள மக்களும் தாழ்ந்த குல மக்களும் சுவிசேஷத்திற்கு காட்டின வாஞ்சை இவர்களிடம் இல்லை. இதை அறிந்த அலெக்ஸாண்டர் டப் தேவ ஒத்தாசையால் ஒரு புதிய திட்டத்துடன் இந்தியாவுக்கு வந்து அதை செயல்படுத்தி வெற்றியும் கண்டார்.

இவரது வாலிப வயதில் 1820–ஆண்டு ஸ்காட்லாந்தில் உயிர் மீட்சியும் மிஷனெரி பாரமும் தீ போல பரவியது. இந்நேரத்தில் தான் 23 வயதான வாலிபன் டப் தன்னை கடல் கடந்து சென்று செய்யும் மிஷனெரி பணிக்கு தன்னை அர்ப்பணித்தார். மேலும் அவர்தான் ஸ்காட்லாந்து திருச்சபையின் கடல் கடந்து சென்ற முதல் மிஷனெரி.

இந்தியாவிற்கு கப்பற் பயணம் மேற்கொண்ட போது இரு கப்பற் சேதங்களை இவர் சந்தித்தார் அதில் ஒன்றில் தன்னுடைய எல்லாப் புத்தகங்களையும் சான்றிதழ்களையும் உடமைகளையும் இழந்தார். இழப்பின் மத்தியிலும் மனம் தளர்ச்சியடையாமல் பயணத்தைத் தொடர்ந்தார். இந்தியா வந்தவுடன் தனது புதிய தரிசனமான மேற்கத்தியக் கலை அறிவியற் கல்வியுடன் ஆங்கிலமும், வேதாகமும் சொல்லி தந்து அதன் மூலம் உயர்குல மக்களின் மூட நம்பிக்கைகளை ஒழித்து அவர்களது அறிவுக்கண்களைத் திறந்து இயேசுவே இரட்சகர் என்பதை அவர்களுக்கு அறிவிப்பதை செயல்படுத்தினார்.

இதற்கு அப்போது இந்தியாவில் இருந்த மிஷனெரிகளும் கல்வி நிறுவனங்களின் பிரதி நிதிகளும் வன்மையாகக் குறை கூறிய போதும் இவர் மனந்தளராமல் ஒரு ஆங்கிலப்பள்ளியை ஆலமரத்தடியில் ஐந்து மாணவர்களுடன் கொல்கத்தாவில் ஆரம்பித்தார். ஒரு கூட்ட உயர்குல வங்காளி மொழி பேசும் இளைஞர்கள் அதிக ஆர்வம் காட்டினர். மேற்கத்தியக் கலை, அறிவியல், ஆங்கிலம் சொல்லிக் கொடுக்கப்பட்டாலும் கிறிஸ்தவ மதப் போதனையே அடிப்படையாகவும், அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் இருந்தது. பாடத்திட்டத்தில் வேதம் ஒரு பாடமாக சொல்லிக் கொடுக்கப்பட்டது.

பள்ளி ஆரம்பித்து 3 வருடத்திற்குள் நான்கு பேர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்றனர். இதைப் பார்த்து பயந்து சிலர் பள்ளியை விட்டு வெளியேறினாலும் ஆர்வம் உள்ள அநேகரை தேவன் அப்பள்ளிக்கு அழைத்து வந்தார். இவரது பள்ளியில் 800 மாணவர்கள்

தொடர்ச்சி 14–ம் பக்கத்தில்..

## ..உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன்..

... (ஆதி – 16:10)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

சகோ. ஜெகன்
சகோதரி. ஜெனிஷா ஜான்
செல்வன். ஆல்வின் டேவிட் மணிராஜ்
செல்வி. ஷாரோன் ஜெனீஃபர்
சகோ. இயேசுதாஸ் ஆரோக்கியதாஸ்
செல்வன். ஜெய்ரஸ் பால்
சகோதரி. சுசீலா லாசர்
சகோ. ஐசக்துரை
சகோதரி. நவிதா பால்ராஜ்
செல்வன். ஜோஷுவா ஜவல்சிங்
செல்வி. ஜெனட் ஆரோக்கியதாஸ்
சகோ. சுபின் சிங்
செல்வி. பிரின்ஸி கமலதாசன்
செல்வி. சுனிதா சுந்தர்ராஜ்
செல்வன்.ஜான் லெவின்

சகோ. ஆரோக்கியராஜ்
சகோ. செங்குட்டுவன்
சகோ. ராஜ்
சகோதரி. ஜோன் ஆப் ஆர்க் அசோக்குமார்
சகோதரி. சுமதி ஐசக் துரை
செல்வி. ஷெரீன் பெனிடா ஸ்டாலின்
சகோதரி. விக்டோரியா ராஜன்
செல்வி. சாரா ஆல்வின்
செல்வன். சாமுவேல் ஆல்வின்
செல்வி. அக்சாள் நிசி எபிநேசர்
சகோதரி. எப்சிபா ஸ்டீபன்
செல்வி. அபிகாள் கிரேஸ் ஜஸ்டின்
சகோதரி. பிரிஸ்சில்லா செங்குட்டுவன்
சகோதரி. அஃபியா சுனில்
சகோ.நக்கீரன்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்

திருமதி – திரு. தம்புகுமார் டென்னிஸ்
திருமதி – திரு. சாம் ஆனந்த்
திருமதி – திரு. வில்கின்ஸ் தினகரன்
திருமதி – திரு. மணிராஜ்
திருமதி – திரு. சாமுவேல்
திருமதி – திரு. வின்ஸனட் சுவீட்
திருமதி – திரு. ஷர்மன்ராஜ்
திருமதி –திரு. இயேசுரெத்தினம்
திருமதி – திரு. கனீஷ் ஜோஸ்வா அமலன்
திருமதி –திரு. தினேஷ் குமார்
திருமதி – திரு. பால் ராஜேஷ்
திருமதி – திரு. வேளாங்கன்னி

**. . . நான் வந்து உன் நடுவில் வாசம்பண்ணுவேன் ...**

**( சகரியா 2:10)**

## 2023 ஜனவரி மாத நிகழ்ச்சி நிரல்

### ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 01/01/2023 | புது வருட ஆராதனை | |
| 08/01/2023 | சகோ.சாம் ஆனந்த் | சகோ.சுகுமார் |
| 15/01/2023 | சகோ.தாமஸ் | சகோ.கிறிஸ்டோபர் |
| 22/01/2023 | சகோ.ஆரோக்கிய ராஜ் | சகோ.ரவிஜான் பீட்டர் |
| 29/01/2023 | சகோ.பிராங்லின் | சகோ.பிரசாத் சுந்தரம் |

### வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 06/01/2023 | சகோ.ஜெய்சேகர் | சாப்லின் மைக்கேல் |
| 13/01/2023 | சகோ.வேலுராமர் | சகோ.கிறிஸ்டோபர் |
| 20/01/2023 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 27/01/2023 | சகோ.டேவிட் | சகோ.ஸ்டாலின் |

**12/01/2023 அன்று முழு இரவு ஜெபம்**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம்– இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணி வரை

**27/01/2023 அன்று வாலிபர் ஐக்கிய கூடுகை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம்– மாலை 6:30 முதல் 8:00 மணி வரை

**(வேத வினா பகுதி – ரோமர் )**

**14/01/2023 அன்று சகோதரிகள் ஐக்கிய கூடுகை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம்– மாலை 6:30 முதல் 8:00 மணி வரை

கூடுகையை பொருப்பெடுத்து நடத்தும் குடும்பம் –சங்கீதாராஜ்

**(வேத வினா பகுதி – மாற்கு)**

# 2022 ஜனவரி மாதத்திற்கான வேத வினா!

**கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**



**1.ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களில்----பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் இல்லை.**

**2.எது மனிதனை தீட்டுப்படுத்தும்? எது மனிதனை தீட்டுப்படுத்தாது.?**

**3.சொல்லியும் செய்யாதிருப்பவர்கள் யார்?**

**4.என்னிடத்தில் நற்கிரியை செய்திருக்கிறாள் என்று இயேசு யாரை குறிப்பிட்டார்.?**

**5.யாக்கோபின் மேலும் யோவானின் மேலும் ஏன் மற்ற சீஷர்கள் எரிச்சலானார்கள்?**

**6.என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது என்று சொன்னது யார்?**

**7.வானமும் பூமியும் அழிந்து போவது எதைக்காட்டிலும் எளிதாய் இருக்கும்?**

**8.ஒளியைக் குறித்து சாட்சிக் கொடுக்க வந்தவன் யாார்?**

**9.எங்கிருந்து வருவான் என்று தெரியாது? எங்கே போவான் என்று தெரியார்?**

**10.நாங்கள் அறிந்திருக்கிறதை சொல்லியும் கண்டதை சாட்சி கொடுத்தும் ஏற்றுக்கொள்ளவில்லை என்று யார் யாரிடம் கூறியது?**

**11.யாக்கோபுடைய கிணறு எங்கே இருந்தது?**

**12.எருசலேமில் தேவாலய பிரதிஷ்டை எந்தக் காலத்தில் வந்ததது?**
**13.யூதர்களில் அநேகம் பேர் எதினால் தேவனை விசுவாசித்தார்கள்?**
**14.பிதா எதினால் மகிமைப்படுவார்?**

**15.இயேசு 3 தரம் யாரைப் பார்த்து என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா? என்று**

**விடைகளை வருகின்ற 20-01-2023க்குள் (WhatsApp #65040638) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில் சுவிஷேச புத்தகத்திலிருந்து பதிலை கண்டுபிடிக்கவும்.**

**- - -தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; -மத்தேயு 7:7**

## 2022 –டிசம்பர் மாத வேத வினாவுக்கு விடை

1. எறும்பு (நீதி 6:6)
2. மனத்தாழ்மையுள்ளவன் (நீதி 29:23)
3. நீதிமொழிகள் 17:8
4. ராஜவின் இருதயம் (நீதி 21:1)
5. நீதிமொழிகள் 17:15
6. தேன் நீதி 25:16
7. மனுஷனுடைய மதியீனம் –நீதி 19:3
8. இலச்சையும் வரும் – நீதி 11:2
9. நீதிமானுக்கு – நீதி 21:15
10. நான் (என்னை) –நீதி 8:22–31
11. கர்த்தர் (எனக்கு) – நீதி 1:33
12. நீதிமொழிகள் 4:23
13. கர்த்தரின் வழி – நீதி 10:29
14. நீதிமொழிகள் 3:5
15. நீதிமொழிகள் 18:18

## 2022– டிசம்பர் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis.சுகந்தி தம்பு குமார்
Sis.நித்யா ஜோன்ஸ்
Sis.ஷெர்ஷிலின்தயா ஏசுரெத்தினம்
Sis.மரகதம் ஸ்டீபன்
Sis.சுபா ஸ்டீபன்
Sis.வனிதா
Sis.ஜீனா சதீஷ்

Sis.செலின் டேவிட்;

Bro.எபிநேசர்
Bro.பால்ராஜ்

..9–ம் பக்க தொடர்ச்சி..

படித்தனர். அடுப்பெரிக்கும் பெண்களுக்கு படிப்பெதற்கு? என்ற கேள்வி இருந்த காலத்தில் உயர்குலப் பெண்களுக்காக ஒரு தனிப்பள்ளியையும் நிறுவினார். இது பல செல்வ சீமாட்டிகளை ஈர்த்தது. நாட்கள் ஆக ஆக ஆயிரக்கணக்கான மாணவர்கள் இவரது பள்ளியில் பயின்றனர்.

இவரது ஊழிய நாட்களிலே நன்கு படித்த திறமையுள்ள உயர்குல மக்களில் 33 பேர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு இயேசுவை பின்பற்றினார்கள். இந்த சிறிய கூட்டம் சமுதாயத்தில் அதிக தாக்கத்தை ஏற்படுத்துகிறதாகவும் அதில் சிலர் மிஷனெரிகளாகவும், போதகர்களாகவும் முக்கியமான திருச்சபை தூண்களாகவும் விளங்கினார்கள் என்பதும் அலெக்ஸாண்டர் டப் ஊழியத்தின் பெரிய வெற்றியாகும். வயது முதிர்ந்த மிஷனெரி வில்லியம்கேரியும்,

படித்த பரந்த மனப்பான்மை கொண்ட சமுதாயச் சீர்திருத்தவாதியுமான ராம் மோகன்ராயும் அதிக ஆதரவு அலெக்ஸாண்டருக்கு கொடுத்தனர். உயர்குல மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட்டு உடன்கட்டை ஏறுதல், குழந்தைத் திருமணம் போன்ற சமுதாய தீமைகளை எதிர்த்துப் போராட ஒரு கூட்ட மக்கள் எழும்பினார்கள். இப்பள்ளியினாலேயே அலெக்ஸாண்டர் டப்பிற்கு ஊழியமே வாழ்க்கையாக இருந்ததினால் குடும்பத்தில் பல தியாகங்களை செய்ய வேண்டியிருந்தது.

தனது இந்திய மிஷனெரிப் பணிக்காக தனது குடும்பத்தையே தியாகம் செய்தார். இவர் வாழ்ந்த காலத்தில் ஒரு வெற்றியுள்ள மிஷனெரியாகவும், வாக்கு வன்மை நிறைந்த மிஷனெரியாகவும் திகழ்ந்தார்.இவரது முன்னேற்றப் பணியினால் நூற்றுக்கும் மேற்பட்ட வாலிபர்கள் வெளிநாட்டுக்கு மிஷனெரியாக பணியாற்ற முன் வந்தனர். 10000–க்கும் மேற்பட்டவர்கள் பணத்தினால் இப்படிப்பட்ட ஊழியத்தை தாங்க முன் வந்தனர்.

உலகம் முழுவதும் முறையான கல்வியையும், சுவிசேஷத்தையும் சேர்த்துத் தரும் முறையை பின் பற்றத் தொடங்கினார்கள்.

இன்றும் நமது பணித்தளங்களில் பள்ளிகள் சிறுவர் விடுதிகள் மூலம் ஆண்டவரை ஏற்றுக்கொண்டு வளர்ந்து மிஷனெரிகளாகவும் திருச்சபைத் தலைவர்களாகவும் எழும்பி இருப்பதும் இந்த மிஷனெரி முறையின் விளைவே.

இந்நாட்களிலும் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் இன்றைய பெற்றோர் மாணவர்கள் மத்தியிலும் சுவிசேஷ பணி நகரங்களில் வாழும் செல்வச் செழிப்பு மிக்க மக்களை சந்திக்க ஆண்டவர் நம்மை அலெக்ஸாண்டர் டப்பை போல அழைப்பாரானால் நம்மை அர்ப்பணிப்போமா?

அன்பு சகோதரன்,
சுகுமார்

# KIDS CORNER

## *The heavy tomatoes*

A teacher asked her students to bring some tomatoes in a plastic bag to school. Each tomato will be given a name of the person whom that child hates. This way, the number of tomatoes will be equal to the number of persons they hate.

On a decided day, the children brought their tomatoes well addressed. Some had two, some had three and some had five, some even had 20 tomatoes in accordance with the number of people each student hate. Thus if a student hates 5 people, he/she will bring 5 tomatoes.

The teacher told them they must carry the tomatoes with them everywhere they go for two weeks. As the days passed the children started to complain about the decay and smell of the tomatoes. The students who had many tomatoes complained it was very heavy to carry and the smell was too much.

After a week, the teacher asked the students "How did you feel this one week?"

The Children complained of awful smell & heavy weight of the tomatoes especially those who carried more tomatoes.

The teacher said, "This is very similar to what you carry in your heart when you don't like some people. Hatred makes heart unhealthy, and you carry that hatred everywhere. If you can't bear the smell of spoilt tomatoes for a week, imagine the impact of bitterness on your heart as you carry it daily."

Forgive those who have angered or hurt you. This makes room for storing good things in your heart. Happy New Year children!

***Prayer :***

Dear Lord, please help me to forgive and forget those who hurt me or made me angry. Cleanse my heart and remove all hatred from it. In Jesus' name I pray, Amen.

***Verse to memorise :***

Be kind and compassionate to one another, forgiving each other, just as in Christ God forgave you.

## சகோதரிகள் பகுதி

**கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரிகளுக்கு, இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள். கடந்த வருடம் முழுவதும் நம்மை கண்மணி போல் காத்து வந்த நம் தேவனுக்கு நன்றி கூறுகின்றேன்.**

**"அவர் உன் வாசல்களின் தாழ்ப்பாள்களைப்பலப்படுத்தி உன்னிடத்திலுள்ள பிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார்" (சங்கீ-147:13)**

**நம் வீட்டு வாசல்களுக்கு தாழ்ப்பாள்கள் மிக அவசியம். தாழ்ப்பாள் இல்லையென்றால், எந்த நேரத்திலும் திருடன் வந்து திருடிச் செல்ல முடியும். அத்தகைய தாழ்ப்பாள்களை தேவன்தாமே பலப்படுத்தி, நமக்கு வரும் ஆசீர்வாதங்களைத் தடுத்து நிறுத்தும் சத்துருவை அழித்து நம் பிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார்.**

**"நானே வாசல் என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவான்" (யோவா-10:9)**

**நம் வாழ்க்கையில் இயேசுகிறிஸ்துவே வாசலாக இருக்கிறார். நாம் அவர் ஆடுகள். அவரைப் போல அவரே நமக்கு நல்ல மேய்ப்பனாக இருக்கின்றார். அவர் பாவிகளை நேசிக்கின்றார் ஆனால் பாவத்தை வெறுக்கின்றார்.**

**நீ நன்மை செய்தால் மேன்மை இல்லையோ? நீ நன்மை செய்யாதிருந்தால், பாவம் வாசற்படியில் படுத்திருக்கும். நாம் பிறருக்கு நன்மை செய்வதற்கு மாறாக, பாவத்தை விரும்பி செய்கின்றோம். திருட்டுத் தண்ணீர் தித்திப்பாகத்தான் இருக்கும், ஆனால் பாவம் செய்கின்ற ஆத்துமா சாகும்.**

நாம் செய்கின்ற ஒவ்வொரு பாவமும் நம்மை நியாயத்தீர்ப்பின் நாளில் கொண்டு வந்து நிறுத்தும் என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. நாம் எதை விதைக்கின்றோமோ? அதையே நாம் அறுப்போம் என்பதை நம் நினைவில் கொள்ள வேண்டும்.

தேவன் நீதியுள்ள நியாதிபதி. அவர் நம்மை காண்கின்ற தேவன். தேவன் ஒருபுறம் பட்சிக்கிற அக்கினி, மறுபுறம் நம்மை நேசிக்கும் தேவன்.
"இதோ திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்ட மாட்டான்" (வெளி–3:8)

இப் புதிய வருடத்தில் இயேசு தாமே நமக்கு முன்பாக திறந்த வாசலை வைத்திருக்கின்றார். அவர் திறந்த வாசலை, இவ்வுலகில் ஒருவராலும் பூட்ட முடியாது.

அவைகள் புதிய வேலையாகவோ, திருமண காரியமாகவோ, கர்பத்தின் கனியாகவோ, ஆவிக்குரிய ஆசீர்வாதமாகவோ இருக்கலாம். அத்தகைய ஆசீர்வாதங்களைப் பெற நாம் அனுதினமும் வேதம் வாசிப்பு ஜெபத்தின் மூலமாகவும் நம் நேரத்தை நாம் அதிகப்படுத்த வேண்டியது மிக அவசியமானதாகும்.

அப்பொழுது ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும் எண்ணி முடியாத அதிசயங்களையும் நம் வாழ்வில் அவர் செய்ய வல்லவராயிருக்கின்றார். நம் மூலமாக நம் சந்ததியும் அசீர்வதிக்கப்படும் அத்தகைய ஆசீர்வாதங்களைப் பெற்று நாம் மகிழ்வுடன் வாழ்வோமாக.

நன்மையும், கிருபையும் நம்மைத் தொடரட்டும்.
தேவனுக்கே மகிமை உண்டாகட்டும்.

**சகோதரி.பியூலா மொர்ஸிபால்**

## வாலிபர் பகுதி

ஒரு இளைஞன் காட்டு வழியே நடந்து போய்க்கொண்டு இருந்தான். அவனுக்கு ரொம்ப பசித்தது. பக்கத்தில் கனிகள் மிகுந்த ஒரு மரம் இருந்தது. அந்த மரத்தில மட மடவென்று ஏறி கனிகளை பறித்து சாப்பிட ஆரம்பிச்சான்.

மரத்தின் உச்சியில நல்ல கனிந்த பழங்கள் இருந்துச்சு. அதை பார்த்ததும் உச்சிக்கு போய் கனிந்த பழங்களை பறிக்க முயன்றான் அப்போ அந்தக் கிளை

அவனோட பாரம் தாங்கமுடியாமல் முறிந்து விழும்போது சற்று சுதாரித்து அவன் கீழே உள்ள கிளையை பிடித்து தொத்திக்கொண்டான். பயந்து போன அவன் என்ன பண்ணுவது என்று தெரியமாமல் கண்களை இறுக்கி மூடிக்கொண்டு கத்த ஆரம்பித்தான்.

சற்று தொலைவிலே முதியவர் ஒருவர் அந்தப் பக்கம் வந்துக்கொண்டிருந்தார். அவன் தொங்குவதை பார்த்து ஒரு கல்லை எடுத்து அவன் மேல் எறிந்தார். அவன் அந்தக் கல் பட்டதும் முழித்துக்கொண்டு என்ன பெரியவரே? நான் இங்கு உயிர் போகும் நிலைமையில் கத்திக்கொண்டிருக்கிறேன்.

என்னைக் காப்பாற்றாமல் கல் எடுத்து அடிக்கிறது நியாமா? என்றுக் கேட்டான். அந்தப் பெரியவர் மறுபடியும் ஒரு கல்லை எடுத்து அவன் மேல் அடித்தார். அவன் கோபம் கொண்டு உந்தி ஒரு மேல் கிளையைப் பிடித்து மேலே ஏற முயன்றுக்கொண்டு பெரியவரே நான் மட்டும் கீழே இறங்கி வந்தேன் அவ்வளவுதான் என்றான்? மறுபடியும் அந்தப் பெரியவர் மற்றொரு கல்லை எடுத்து அவன் மேல் எறிந்தார்.

அவன் கோபம் கொண்டு மறுபடியும் உந்திக் கிளையைப் பிடித்து மேலே ஏறி மட மடவென்று கீழே இறங்கி வந்து அந்தப் பெரியவரை நோக்கி பெரியவரே நீங்கள் செய்தது நியாயமா? நான் உயிருக்கு போராடுகின்ற நிலமையில் கிளையில் தொத்திக்கொண்டிருக்கிறேன்.

எனக்கு உதவி செய்யவில்லை என்றாலும் பரவாயில்லை. ஏன் உபத்திரவம் செய்கிறீா என்று கேட்டான். அதற்கு அந்தப்பெரியவர் நான் உனக்கு உதவிதான் செய்தேன் தம்பி என்றார். அதற்கு அவன் என்ன சொல்கிறீர் என்றான். அவர் அவனுக்கு நீ பயந்து போய் என்ன செய்வது என்று தெரியாமல் உன் பயத்தினால் கண்ணை இறுக்கி மூடிக்கொண்டிருந்தாய்.

நான் உன் மேல் கல் எறிந்த போது உன் பயம் நீங்கி உன் அறிவு யோசிக்க ஆரம்பித்தது. என்னை நோக்கி சீறிக்கொண்டு என்னை பிடிக்க வேண்டுமென்று சிந்தித்து முயற்சித்து கீழே இறங்கி வந்தாய். இப்பொழுது பிழைத்துக்கொண்டு. இப்ப சொல் நான் உனக்கு உதவிதானே செய்தேன் என்றார். அவன் உணர்ந்து அவருக்கு நன்றி தெரிவித்து விட்டு அங்கிருந்து சந்தோஷத்தோடு சென்றான்.

அன்பான சகோதர, சகோதரிகளே நாம் சில நேரம் சூழ்நிலையை பார்த்து பயப்படும் போது நாம் அறிவை மறந்து விடுகிறோம். ஆனால் நம் அறிவுக்கண் திறக்கும் போது நம்முடைய பயத்தை நாம் ஜெயிக்கிறோம்.

சங்கீ–27:1 இப்படி சொல்கிறது "கர்த்தரின் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர் யாருக்கு பயப்படுவேன், கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர் யாருக்கு அஞ்சுவேன்"

வாலிபம் இயேசுவுக்கே

# கடந்த வருட நிகழ்வுகள் தங்கள் பார்வைக்கு சில


















## இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் – 2023

# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

சபை முதன்மை ஊழியர்
சகோ. ஜெயசேகர் — 96646444

செயலாளர்
சகோ. இயேசு ரெத்தினம் — 23924262, 97545812

பொருளாளர்
சகோ. பால் ஜெகநாதன் — 66889535, 98852812

பெண்கள் ஐக்கிய தலைவி
சகோதரி . எப்சிபா ஸ்டீஃபன் — 67792009, 56640551

வாலிப ஐக்கிய தலைவர்
சகோ. பிரசாத் சுந்தரேசன் — 60781168

Church Website Address - ahmaditamilchurch.com

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

**Church Postel Address**

Your Name -
PO. Box No : 46795.
64018, Fahaheel - Kuwait

Private Circulation only